டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.11.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 130- Madurai | Online Edition

## 'மாபெரும் தக்காளி சவால்'

## 28 கண்டுபிடிப்பாளர்களுக்கு நிதியுதவி



புது தில்லி, நவ.22

மத்திய அரசின் நுகர்வோர் விவகாரங்கள் துறையானது, கல்வி அமைச்சகத்தின் கண்டுபிடிப்பு பிரிவுடன் இணைந்து, தக்காளி மதிப்புச் சங்கிலியின் பல்வேறு நிலைகளில் புதுமையான யோசனைகளை வரவேற்கும் வகையில், மாபெரும் தக்காளி சவால் (தக்காளி கிராண்ட் சேலஞ்ச் (TGC) என்ற ஹேக்கத்தானை தொடங்கியுள்ளது.



30.06.23 அன்று தொடங்கப்பட்ட மாபெரும் தக்காளி சவால் மாணவர்கள், ஆராய்ச்சி அறிஞர்கள், ஆசிரியர்கள், தொழில் துறை நிபுணர்கள், ஸ்டார்ட் அப்கள் மற்றும் தொழில் வல்லுநர் களிடமிருந்து உற்சாகமான வரவேற்பைப் பெற்றது.

இந்தியா முழுவதும் உள்ள கண்டுபிடிப்பாளர்களிடமிருந்து மொத்தம் 1,376 யோசனைகள் பெறப்பட்டன. கடுமையான சுற்று மதிப்பீட்டிற்குப் பிறகு, முன்மாதிரி உருவாக்கம் மற்றும் வழிகாட்டுதலுக்காக, 28 யோசனைகளுக்கு நிதி வழங்கப் பட்டுள்ளதாக நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலாளர் நிதி கரே நேற்று செய்தியாளர் சந்திப்பின்போது கூறினார்.

உலகளவில் தக்காளி உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியா, ஆண்டுதோறும் 20 மில்லியன் மெட்ரிக் டன் தக்காளி உற்பத்தி செய்கிறது. இருப்பினும், அதிக மழை அல்லது




திடீர் வெப்பம் போன்ற பாதகமான வானிலை நிலைமைகள், உற்பத்தி மற்றும் இருப்பை பாதிக்கின்றன. இதன் விளைவாக, அதிக விலை ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. இந்த சவால்கள் விவசாயிகளின் வருமானத்தை நேரடியாக பாதிக் கின்றன. விநியோகச் சங்கிலிகளை சீர்குலைப்பதுடன், குறிப்பிடத்தக்க விரயத்திற்கு வழிவகுக்கின்றன. தக்காளி கிராண்ட் சேலஞ்ச் (TGC) இந்த முக்கியமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும், தக்காளி விநியோக சங்கிலியை உறுதிப் படுத்துவதற்கும் புதுமையான மற்றும் அளவிடக்கூடிய தீர்வுகளைக் கண்டறிய தொடங்கப்பட்டுள்ளது.

தக்காளி உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் விநியோகம் ஆகியவற்றில் உள்ள முறையான சவால்களை எதிர்கொள்ள இந்தியாவின் இளம் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சி யாளர்களின் திறமையைப் பயன்படுத்துவதை இந்த கிராண்ட் சேலஞ்ச் நோக்கமாகக் கொண்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# விருதுநகர் மாவட்டத்தில் வேளாண் விஞ்ஞானி மற்றும் உதவி இயக்குனர் கள ஆய்வு



விருதுநகர், நவ.22

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரத்தில் கான்சாபுரம், எஸ்.கொடிக்குளம், வத்திராயிருப்பு ஆகிய பகுதிகளில் பருவ கால மாற்றம் ஏற்பட்டதால் நெல் பயிரில் சிலந்தி மட்டும் இலைச் சுருட்டு புழு தாக்குதலை கட்டுப்படுத்த ஸ்ரீவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலையத்திலிருந்து விஜயராகவன் உதவி பேராசிரியர், செல்வராணி, வேளாண்மை உதவி இயக்குனர் ஆகியோர் தலைமையில் கள ஆய்வு நடைபெற்றது.

ஆய்வின்போது நெல் பயிர் செய்த விவசாயிகளின் வயலினை ஆய்வு செய்ததில் சிலந்தி பூச்சி தாக்குதல் தென்பட்டது. இவற்றை கட்டுப்படுத்தும் வழிமுறையாக இரசாயன மருந்துகளான பென்சகுயின் 10 EC 10 மிலி/லி, ஸ்பைரோ மெஸி பென் 22.9 SC –0.5/மிலி/லி மற்றும் ப்ரோபோகைட் 57 EC – 1 மிலி/லி ஆகிய மருந்துகளில் எவையேனும் ஒன்று பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.

மேலும் இலை சுருட்டுப் புழுவை கட்டுப்படுத்த கார்ட்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 sp – 28 மிலி /லி, ப்ளூ பென்டமைட் – 0.2 மிலி/லி மற்றும் குளோரான்டனிபோல் 0.5 மிலி/லி ஆகிய வற்றில் எவையேனும் ஒன்றை பயன்படுத்தி கட்டுப்படுத்தலாம்.

இம்மருந்துகளில் பரிந்துரைக்கப்பட்ட அளவினை பயன்படுத்தி சிலந்தி மற்றும் இலை சுருட்டு புழு தாக்குதலில் இருந்து விடுபட வேளாண்மைத் துறை சார்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டதாக வேளாண்மை உதவி இயக்குனர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்தார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வேளாண் பொருட்களுக்கான ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்த பயிற்சி

கோயம்புத்தூர், நவ.22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் இரண்டு நாள் வேளாண் பொருட்களுக்கான ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் நடைமுறைகள் குறித்து பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியில் உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பெண்கள், இறுதியாண்டு பட்டதாரி மாணவர்கள், பட்டதாரிகள், இளைஞர்கள் மற்றும் தொழில் முனைவோர்களும் பங்கு பெறலாம். இப்பயிற்சி வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் 26 மற்றும் 27.11.24 ஆம் தேதிகளில் நடைபெற உள்ளது. கட்டணமாக நபர் ஒருவருக்கு ரூ.3,540/- வசூலிக்கப்படுகிறது. பதிவுக்கு குறைந்த எண்ணிக்கையிலான இடங்களே உள்ளது. மேலும் பதிவுக்கு : மின்னஞ்சல் : business@tnau.ac.in, தொலைப்பேசி எண் : 0422-6611310, கைப்பேசி எண் : 99949 89417.



# கூட்டுறவு வார விழா - 2024

சேலம், நவ,22

சேலத்தில், 71 வது அனைத்திந்தியா கூட்டுறவு வார விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கூட்டுறவுத் துறை அமைச்சர், கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாதுறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், கூட்டுறவுத்துறை தலைமை செயலாளர், டாக்டர் ஜே.ராதாகிருஷ்ணன், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர், ந.சுப்பையன் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்றனர்.

இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, சாகரிகா மற்றும் இதர உரங்கள் இந்நிகழ்ச்சியில் காட்சிப்படுத்தப்பட்டது. இப்கோமாநில விற்பனை மேலாளர் ந.சுரேஷ் நானோ உரங்கள் பற்றி அதிகாரிகளுக்கு விளக்கினார்.



இப்கோ, களஅதிகாரி, அருள்மணி நானோ உரங்களை ட்ரோன் மூலம் தெளிப்பதனால் விவசாயிகளுக்கு உரச்செலவு குறைந்து மகசூல் அதிகரிக்கும் என வலியுறுத்தினார்.

நானோ உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிக்கலாம் என கூறினார்.

பின்னர், இப்கோ நிறுவனத்தின் விவசாயிகளுக்கான இலவச விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹரன் பீமாயோஜனாவின் மூலம் நானோ உரங்கள் வாங்கினால் ரூ.2,00,000 வரை விபத்துக் காப்பீடு பெறலாம் என்றார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 22.11.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 28 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 28 | 32 | 57 | உருளை (பிற) | 30 | 38 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 44 | 57A | உருளை(ஊட்டி) | 34 | 58 |
| 2 | வெண்டை | 40 | 46 | 58 | மேரக்காய் | 22 | 28 |
| 3 | தக்காளி (நாடு) | 25 | 28 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 35 | 40 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 22 | 25 | 60 | கேரட் | 60 | 70 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 65 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 70 | 80 |
| 6 | புடலை | 30 | 34 | 62 | நூல்கோல் | 55 | 60 |
| 7 | பீர்க்கன் | 40 | 44 | 63 | டர்னிப் | 55 | 60 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 24 | 27 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 45 | 50 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 100 | 120 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 320 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 20 | 24 | 69 | இஞ்சி | 48 | 100 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 18 | 22 | 70 | புருக்கோலின் | 170 | 180 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 58 | 71 | பென்னி பீன்ஸ் | 45 | 50 |
| 16 | பெ.வெங்காயம் | 45 | 51 | 72 | குடமிளகாய் | 50 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 30 | 35 | 73 | ஊட்டி அவரை | 150 | 155 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 80 | 90 | 71A | | | |
| 20 | தேங்காய் | 52 | 56 | | | | |
| 21 | மாங்காய் | 40 | 46 | | | | |
| 22 | வாழைக்காய் | 28 | 32 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 45 | 48 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 65 | 70 | 75 | எலுமிச்சை | 60 | 70 |
| 25 | சேப்பங்கிழங்கு | 45 | 50 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 38 | 42 | 78 | பப்பாளி | 22 | 26 |
| 28 | கறிவேப்பிலை | 40 | 46 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 38 | 42 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 10 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 20 | 22 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 20 | 22 | 83 | ஆரஞ்சு | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 20 | 25 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 20 | 22 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 20 | 22 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 20 | 22 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 10 | 12 | 89 | | | |
| 39 | வல்லாரை | 10 | 12 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 35 | 40 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 40 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 26 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 20 | 24 | 96 | நேந்திரன் | 38 | 42 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 35 | 40 | 97 | செவ்வாழை | 65 | 70 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 0 | 0 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 0 | 0 |
| 50 | நிலக்கடலை | 50 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 40 | | | | |

# உலர் பழங்கள் மற்றும் உடனடி தயார் நிலைப்பானம் தயாரிக்கும் ஒரு நாள் பயிற்சி



மதுரை, நவ.22

உலர் பழங்கள் மற்றும் உடனடி தயார் நிலைப்பானம் தயாரிக்கும் ஒரு நாள் செயல் விளக்க பயிற்சியானது வேளாண்மை அறிவியல் நிலையம் மதுரையில் நடைபெற்றது.

இப்பயிற்சியினை திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இ.சுப்பிரமணியன் தொடங்கி வைத்து பழங்களில் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தார்.

முனைவர் கி ஜோதிலட்சுமி, உலர் பழங்கள் தயாரிக்கும் தொழில்நுட்பம் மற்றும் உலர் பழங்களின் முக்கியத்துவம் உலர் பழங்களை தயாரிப்பதற்கு தேவையான உலர்ப்பான்களான சூரிய உலர்த்தி மின் உலர்த்தி நுண் தெளிப்பான் மூலம் உலர்த்தி பல பவுடர் தயாரிக்கும் தொழில்நுட்பம் மற்றும் உறைய வைத்து உலர்த்துதல் மூலம் பழங்களை பதப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் சூரிய உலர்த்தியின் மூலம் சப்போட்டா பழப்பவுடர் தயாரிக்கும் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் அன்னாச்சி பல உடனடி தயார் நிலைப்பானம் தயாரிப்பதற்கு தேவைப்படும் இயந்திரங்களின் பயன்பாட்டு செயல்விளக்கமும் பயிற்சியாளர்களுக்கு விளக்கப்பட்டது.

இப்பயிற்சியில் இருபதுக்கும் மேற்பட்ட பண்ணை மகளிர் தொழில்முனைவோர்கள் புதிய தொழில் தொடங்க ஆர்வமுள்ள இளைஞர் இளைனிகள் பங்கேற்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN Jain Irrigation Systems Ltd. Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# இயற்கை வேளாண்மை செய்வோம்

## எதிர்காலத்தை நோய் நொடி இல்லாமல் பாதுகாப்போம்



இயற்கை வேளாண்மை என்பது விவசாயத்தின் ஒரு முறையாகும். இதில் செயற்கை இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்களின் பயன் பாடு குறைக்கப்படுகிறதோ இல்லையோ, ஆனால் அவற்றின் இடத்தில், கரிம உரங்கள், பயிர் எச்சங்கள், சாணம் உரம், மண்புழு உரம், போன்ற கால்நடை உரங்கள், உயிர் உரம் மற்றும் பசுந்தாள் உரம் மற்றும் கரிம பூச்சி கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நீண்ட காலம் நிலத்தின் வளம் பேணப்படுவதால் சுற்றுச்சூழல் மாசு படாமல் சுற்றுச்சூழல் சமநிலையும் பேணப்படுகிறது. இந்தியாவில் மட்டுமின்றி உலகில் மக்கள்தொகை மிக வேகமாக அதிகரித்து வருவதை நீங்கள் பார்க்க வேண்டும்.

உணவு தானியங்களின் பிரச்சனை அதிகரித்து வருகிறது. விவசாயத்தில் அதிகபட்ச உற்பத்தியைப் பெற மனிதர்களால் பல வகையான செயற்கை இரசாயன உரங்கள் (உரம்), மற்றும் விசப் பூச்சிக்கொல்லிகள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக, நிலத்தின் வளத்தில் அதன் தாக்கம் நிலத்தின் தரத்தை சீர்குலைப்பதோடு, மனிதர்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. மேலும் இது சுற்றுச்சூழல் மாசுபாட்டையும் அதிகரிக்கிறது.



இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் மட்டுமே இந்தப் பிரச்னை களுக்குத் தீர்வு காண முடியும். சில ஆண்டுகளுக்கு முன்பு, நம் நாட்டில் ரசாயன உரங்கள் பயன் படுத்தப்படாத போது, விவசாயம் இல்லாத போது, விவசாயம் இல்லை, உற்பத்தியும் அதிகமாக இருந்தது. முன்பு இயற்கை விவசாயம் அல்லது சூழலுக்கு ஏற்ப விவசாயம் செய்து வந்தோம். அப்போது, உரங்களுக்குப் பதிலாக, மாட்டுச் சாணம்,

மாட்டுச் சிறுநீர் ஆகியவை பயன்படுத்தப்பட்டு, நீர், நிலம், காற்று, சுற்றுச்சூழலை மாசுபடுத்தாது. மேலும் மனிதர்களும் ஆரோக்கிய மாக இருந்து வந்தனர். தற்போது ரசாயன உரங்களால் விளைந்த தானியங்களை சாப்பிடுவதால், மனிதர்கள் நோய் எதிர்ப்பு சக்தியை இழந்து வருகின்றனர். இதனால் நாம் வரும் சந்ததிகளை பாதுகாக்க இயற்கை வேளாண்மை செய்வோம் எதிர்காலத்தை நோய் நொடி இல்லாமல் பாதுகாப்போம். இனக் கவர்ச்சி பொறி மற்றும் நிறப்பொறி, உயிர் உரங்கள் தேவைக்கு 99523 05745, 88703 92422 தொடர்பு கொள்ளலாம்.

தொகுப்பு : **கோ.சுரேஷ்குமார், மேனாள் வேளாண்–அறிவியல், தொழிற்கல்வி ஆசிரியர், நாகலாபுரம். கோவில்பட்டி,**



# நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது



திண்டுக்கல், நவ.22

திண்டுக்கல் மாவட்டம் வேட்டியார் சத்திரம் வட்டாரம் அட்மா திட்டத்தின் கீழ் கன்னடம்பட்டி கிராமத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் சந்திரமோகன் ஆலோசனைப்படி நிலக்கடலை பண்ணை பள்ளி நடைபெற்றது.

இதில் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலைய ஆராய்ச்சி-யாளர் சீனிவாசன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கடலை சாகுபடி முறை அதற்கு களை எடுத்து ஜிப்சம் இட்டு மண்




அனைத்தால் விழுதுகள் அதிகமாக இறங்கி நல்ல மாகசூல் கிடைக்கும். மற்றும் அதன் பராமரிப்பு முறை பற்றி எடுத்துக் கூறினார். கடலை பண்ணை பள்ளி மூன்றாம் வகுப்பு முத்து பிரியா தோட்டத்தில் விவசாயிகள் 25 பேருடன் சேர்த்து நடத்தப்பட்டது. இதில் தோட்டக்கலை உதவி அலுவலர் சக்தி வேல், தோட்டக்கலை உதவி அலுவலர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டு துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்து கூறினர். இப்பயிற்சிக்கு அப்பகுதி விவசாயிகளை உதவி வேளாண்மை அலுவலர் சரவணன் ஒருங்கிணைந்து பெரிதும் உதவினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் சுகன்யா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பொன் தமிழரசு, அருண்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS : 4985
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# டிஜிட்டல் கிராப் சர்வே எந்த நிலையில் உள்ளது தெரியுமா?



விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்க்கும் எளிய முறையில் அடங்கல் பெறுவதற்காக தான் இந்த டிஜிட்டல் கிராப் சர்வே. ஒன்றிய அரசின் அறிவுறுத்தலின் பேரில் தமிழகத்தில் கடந்த 6.11.24ல் தொடங்கி பல்வேறு காலநிலை இன்னல்களுக்கிடையே (மழை, வெயில், பனி) நடைபெற்று வருகிறது. இதனால் மாநில வாரியாக வேளாண்மை சாகுபடிக்கான பரப்புகளை துல்லியமாக மதிப்பீடு செய்து அதனுடைய அடிப்படையின் பேரில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சி திட்டங்களை உருவாக்கிட இந்த தொழில்நுட்ப பயிர் கணக்கீடு உதவும்.

தமிழகத்தில் இந்த பணிகளை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் அனைத்து சகோதார துறையினருடன் அந்த அந்த மாவட்டத்திலுள்ள / அருகேயுள்ள வேளாண்மை கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் உதவியுடன் இந்த பணி 38 மாவட்டங்களிலும் (சென்னை நீங்கலாக) திட்டபணிகள் நடைபெற்று வருகிறது.

**தமிழகத்திலுள்ள எத்தனை வட்டங்கள், கிராமங்கள் உள்ளன என்பது தெரியுமா?**

தமிழகத்தில் 38 மாவட்டங்களில் 302 வட்டங்களில் 17,164 கிராமங்களில் உள்ள 50.79 லட்சம் பட்டா நிலங்களில் உள்ள 4.06 கோடி உள்பிரிவுகளில் (SURVEY SUB-DIVISION) எண்களில் இந்த கணக்கீட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தற்போதைய நிலையில் எவ்வளவு சர்வே எண்களில் கணக்கெடுப்பு நடைபெற்றுள்ளது? மீதம் உள்ளது எவ்வளவு?**

3.45 கோடி உள்பிரிவுகளில் மட்டும் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 6.06 லட்சம் உள்பிரிவுகள் கணக்கெடுப்பு நடத்திட வேண்டியுள்ளதாக தகவல் கூறுகின்றன. அதாவது தற்போதைய நிலவரப்படி மாநில அளவில் 85.07% கணக்கெடுப்பு பணிகள் நிடைவடைந்துள்ளன. முழுமையாக நடந்த பின் (DIGITAL CROP SURVEY APP) செயிலில் மாற்றம் செய்யப்படும்.

**முழுமையாக கணக்கீட்டு பணிகள் முடிந்த மாவட்டங்கள் உள்ளனவா?**

திண்டுக்கல் மாவட்டத்தில் 14.33 லட்சம் உள்பிரிவுகளை முழுமையாக கணக்கீட்டு முதலிடத்தில் உள்ளது. அடுத்த படியாக கடலூர் (15.12) லட்சம் உள்பிரிவுகளை கணக்கீட்டு (ஒரு உட்பிரிவு நீங்கலாக) இராண்டவது இடத்திலும், திருப்பத்தூர் மாவட்டம் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

**இன்னும் எத்தனை உட்பிரிவுகள் கணக்கெடுக்க வேண்டும் தெரியுமா?**

4 மாவட்டங்கள் நீங்கலாக மீதமுள்ள 34 மாவட்டங்களில் 60.61லட்சம் உள் பிரிவுகள் கணக்கீடு செய்யப்படாமலேயே உள்ளது. இந்த பணிகளை அந்த அந்த மாவட்டத்திலுள்ள வேளாண், தோட்டக்கலை அலுவலர்களால் மேற்கொள்ளப் படுவதாக தெரிகிறது.

**இந்த கணக்கெடுப்பில், ஏதேனும் மறு ஆய்வு உண்டா?**

ஆம் தோராயமாக தேர்வு செய்யப்பட்ட 57,432 தரவுகள் வேளாண்மை துறை மூலமாக மறு ஆய்வு (RE VALUATION) செய்த பின்னரே, அனைத்து தரவுகளையும் (DATAS) முழுமை யாக குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**இந்த கணக்கெடுப்பால் என்ன பயன் தெரியுமா?**

1) இந்த டிஜிட்டல் கிராப் சர்வே நாடு முழுவதுமாக நடத்தப்பட்டு, செயற்கை நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE) தொழில்நுட்பத்துடன் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

2) இந்த கணக்கெடுப்பால், குறிப்பிட்ட சர்வே எண்ணில் என்ன பயிர் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நாட்டின் எந்த இடத்தில் இருந்தாலும் கண்காணிக்க முடியும்.

3) விவசாயிகள் தங்களுடைய தேவைக்கான 'அடங்கலை' இணைய தள வாயிலாக எடுப்பதற்கான வாய்ப்புகள் எதிர்காலத்தில் உருவாக்கப்படும்.

4) விவசாயிகள் வருவாய்துறை அலுவலகம் சென்று காத்திருக்க வேண்டியதில்லை, தேவையற்ற வீண் அலைச்சல் தவிர்க்கப்படுகிறது.

5) சாகுபடி செய்யப்பட்ட பயிரை இனி மாற்றி எழுதி அடங்கல் பெற முடியாது.

6) பயிர் கடன் பெறுவது, பயிர் காப்பீடு உள்ளிட்ட பணிகளில் மோசடி நடைபெற வாய்ப்பில்லை.

7) ஒன்றிய, மாநில அரசுகள் பயிர் சாகுபடி பரப்பை வைத்து அதற்கான திட்டங்களை துல்லியமாக திட்ட முடியும்.

8) காரீப் மற்றும் ராபி பருவத்தில் இந்த கணக்கெடுப்பு நடைபெறுவதால் துல்லியமான சாகுபடி பரப்பு அறிந்து அதற்கேற்ப ஏற்றுமதி/இறக்குமதி உணவு தானியங்கள் எண்ணெய்கள், பருப்பு வகைகளை கணக்கீடு செய்ய முடியும்.

இதுவரை இந்த சர்வே பற்றி தெளிவாக தெரியாத விவசாயிகள் இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து கணக்கெடுக்கும் பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

விழுப்புரம், நவ.22

விழுப்புரம் மாவட்டம், ஓடைவானூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், விழுப்புரம் மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமை வகித்தார். அவர், பயிர்களில் இப்கோ நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, மற்றும் சாகரிகா பயன்படுத்தும் முறை மற்றும் நானோ உரங்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினார்.

இப்கோ, கள அதிகாரி, அப்துல்ரஹ்மான், இரசாயன உரங்களின் பயன்பாட்டால் மண் மாசுபடும் மற்றும் மண்வளம் குறையும் என்றும் மண்வளத்தை காக்க நானோ உரங்களை பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.

குறைந்த செலவில்அதிக மகசூல் பெறவும், துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிக்கவும் இப்கோ கிசான் ட்ரோன் சேவையை பயன்படுத்தலாம் என்றும் நானே உரங்களுடன் பிற வேளாண் பூச்சிக்கொல்லி மருந்துகளும் கலந்து தெளிப்பதனால் இடுபொருள் செலவு குறையும் என்றும் கூறினார். மேலும், நானோ உரங்கள் வாங்கினால் இப்கோவின் விவசாயிகளுக்கான விபத்துக் காப்பீடு திட்டமான சங்கடஹரன் பீமாயோஜனாவின் மூலம் ரூ.2,00,000 வரை காப்பீடு பெறலாம் என்றார்.




இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits.
JAIN Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெல் வயல்களில் வெள்ளப் பாதிப்பின் பொழுது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இராமநாதபுரம், நவ.22

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மற்றும் திருப்புல்லாணி வட்டாரங்களில் வடகிழக்கு பருவமழை பெய்து வருவதால் விவசாயிகள் நெல் வயல்களில் வெள்ளப் பாதிப்பின் பொழுது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து செல்வம், வேளாண்மை உதவி இயக்குநர் திருப்புல்லாணி கூறியிருப்பதாவது, நெற்பயிர்களின் வளர்ச்சி பருவத்தின் பொழுது வயல்களில் தேங்கியுள்ள நீரை உடனடியாக வடிகட்ட வேண்டும். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனாஸ் நுண்ணுயிரியினை 20 கிலோ மணல் (அ) தொழு உரத்துடன் கலந்து இட வேண்டும். ஒரு சதவிகித யூரியா கரைசல் தெளிக்கலாம். அதாவது 200லிட்டர் தண்ணீரீல் 2 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ சிங்கசல்பேட் உரத்தினை கலந்து கைத்தெளிப்பான் கொண்டு பயிர்கள் மீது படும்படி தெளிக்கலாம்.




நெற்பயிர்களில் பூக்கும் மற்றும் பால் பிடிக்கும் பருவத்தில் இருக்கும் பொழுது வயலில் தேங்கியுள்ள நீரை வடிகட்ட வேண்டும். 2 சதவிகித டிஎபி கரைசல் (டிஏபி 4 கிலோ மற்றும் பொட்டாஷ் 2 கிலோவினை 10 லிட்டர் தண்ணீரில் 24 மணி நேரம் ஊறவைத்து தெளிந்ததை கொண்டு 180 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும் அல்லது அம்மோனியம் சல்பேட் 50 கிலோ அல்லது யூரியா 22 கிலோ உடன் ஜிப்சம் 18 கிலோ மற்றும் வேப்பம் புண்ணாக்கு 5 கியோ ஆகியவற்றை முதல்நாள் இரவில் கலந்து வைத்து விட்டு காலையில் 17 கிலோ பொட்டாஷ் கலந்து வயலில் இட வேண்டும். மேலும் விபரங்களுக்கு விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையம் உச்சிப்புளி மற்றும் திருப்புல்லாணியினை அனுகலாம் என தெரிவித்துள்ளார்.

# சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் சார்பாக நெல், நிலக்கடலை சாகுபடிக்கான தொழில்நுட்ப தகவல்

சிசிடி (CCD) நிறுவனத்தின் ஒரு அங்கமான சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் கம்பெனியின் விவசாயிகளுக்கு இந்த கார்த்திகை பட்டத்தில் நெல், நிலக்கடலை பயிரில் செயல்படுத்த வேண்டிய தொழில்நுட்ப தகவல்களை சிசிடி செயல் இயக்குநர் பத்மாவதி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோ ஆலோசனையின் படி




புதிய விரிவாக்க முறையில் (அலைபேசி) வாயிலாக 20க்கு மேற்பட்ட விவசாயிகளை (முடுக்கன்குளம் பணக்குடி இசலி சொட்டமுறி தீயனூர் குறவைகுளம் சொக்கனேந்தல் கல்யாணிபுரம் கிராம விவசாயிகளை தொடர்பு கொண்டு வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் கலந்துரையாடலை நடத்தி அவரவர் பிரச்சனைக்குரிய தீர்வுகளை விரிவாக எடுத்துக் கூறினார்.

**விவசாயிகள் கூறிய தகவல் அடிப்படையில் இந்த பகுதியில் செய்ய வேண்டிய உத்திகளை காண்போம்.**

1) நெல் சில இடங்களில் மழையின் காரணமாக பயிர்களைதல், பயிர் எண்ணிக்கை பராமரித்தல் போன்ற பணிகள் நடைபெற ஆலோசனை வழங்கப்பட்டது.

2) இந்த மழையை பயன்படுத்தி வளர்ச்சி குன்றிய நெல் பயிருக்கு 22 கிலோ யூரியா+18 கிலோ ஜிப்சம்+4 கிலோ வேப்பம் புண்ணாக்கு உடன் முதல் நாள் கலந்து வைத்து அடுத்த நாள் காலையில் 17 கிலோ பொட்டாஷ் கலந்து நெல் வயலில் இட வேண்டும். அவ்வாறு செய்வதால் யூரியா பயிருக்கு (SLOW RELEASE) யாக கிடைப்பதால் எப்போதும் இலைகள் பச்சையாக இருக்கும். பச்சையாக இருப்பதால் ஒளிச்சேர்க்கை நன்றாக நடைபெறும்.

3) மஞ்சள் நிற நெல் பயிர் காணப்பட்டால் நுண்ணூட்ட சத்து குறைபாடாகும். இதனை தவிர்க்க 1கிலோ சிங் சல்பேட் உடன் 1கிலோ யூரியா கலந்து இலைவழி தெளிப்பு செய்ய வேண்டும்.

4) இலை கருகல் நுனி போன்ற பாகங்களில் இந்த அறிகுறி தென்பட்டால் ஒரு ஏக்கருக்கு 1 கிலோ சூடாமானஸ்யை 200 லிட்டர் தண்ணீர கலந்து தெளிக்க வேண்டும்.

5) நெல் பயிருக்கு பயிர் காப்பீடு 447 உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட காலக்கெடுவில் (16.12.24) இ-சேவை மைய வாயிலாக பதிவு செய்ய வேண்டும்.

**நிலக்கடலை**

நிலக்கடலையில் விதைநேர்த்தியாக ஒரு கிலோ பருப்பிற்கு 4 கிராம் டிவிரிடி கலந்து விதைப்பதால் நிலக்கடலையில் பரவும் வேர் வாடல் போன்ற நோய்களை கட்டுப்படுத்தலாம். கடலை விதைப்பில் 30x10 செ.மீ இடைவெளியில் பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும். நிலக்கடலைக்கு காப்பீடாக ஏக்கருக்கு 311 உரிய காலத்துல 30.12.24க்குள் செலுத்த வேண்டும்.

இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செயல் அலுவலர் பார்த்த சாரதி மற்றும் கள அலுவலர்கள் பரதன், பிரியா செய்திருந்தனர்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# மழைக்காலத்தில் பயிர்களை பராமரிக்கும் முறை



காலநிலை மாற்றத்தின் காரணத்தினால் இப்போது நினைத்த நேரத்தில் மழை பெய்கிறது. இப்போது மழைக் காலம். மழையின் காரணமாக மரங்கள், பல்வேறு வித பயிர்களின் செடி கொடிகள் அனைத்தும் மிகவும் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. அதேபோல் வயல்களில் உரிய முறையில் பாத்தி எடுக்காத காரணத்தினால் தண்ணீர் தேங்கி பயிர்கள் அழியவும் வாய்ப்புகள் அதிகம் உள்ளது. சரியான உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பதன் மூலம் மழை பொழியும் சமயங்களில் பயிர்களைப் பாதுகாக்கலாம்.

● விவசாயிகள் தங்களது நிலங்களில் தண்ணீர் தேங்காத வாறு வடிகால் வசதி செய்ய வேண்டும்.

● வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டால் தென்னந்தோப்பிற்கு தண்ணீர் விடுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதேபோல் மாமரம், பலாமரம், முந்திரி உள்ளிட்ட மரங்களில் இருக்கும் தேவையற்ற கிளைகளையும் வெட்டி அகற்ற வேண்டும்.

● வாழை உள்ளிட்ட பயிர்களுக்கு தாங்குக் குச்சிகள் அமைக்க வேண்டும், வாழைத்தோப்பைச் சுற்றி வாய்க்கால் எடுத்து, மழை நீர் தேங்காமல் வெளியேற, வழிவகை செய்ய வேண்டும்.

● நாற்றங்கால்களில் மேட்டுப்பாத்தி அமைத்து தண்ணீர் தேங்காதவாறு அமைக்க வேண்டும்.

● உரமிடுவதற்கு மரத்தைச் சுற்றி பாத்தி கட்டுதல் போன்ற பணிகளையும் தவிர்க்க வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு சரியான முன்னெச்சரிக்கை எடுப்பதன் மூலம் பயிர்களைப் பாதுகாக்கலாம்.

● தோட்டக்கலைப் பயிர்களான கொய்யா, சீதா மற்றும் இதர பழப்பயிர்களில் கவாத்து செய்வதன் மூலம் மரத்தின் சுமையைக் குறைத்து மழை, புயல் காற்றில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கலாம்.

● தோட்டக்கலைப் பயிர்களான வாழை, மரவள்ளி, வெங்காயம், மிளகாய், தக்காளி, வெண்டை மற்றும் கத்தரி போன்ற பயிர்களுக்கு உரிய காலத்தில் பயிர்க் காப்பீடு செய்ய வேண்டும்.

● நோய்க்கிருமிகள் மழைநீரில் எளிதில் வயல்களில் பரவி பயிர்களைப் பாதிக்க வாய்ப்பு ஏற்படும்.

மேலும், பந்தல் வகை காய்கறிகளைத் தாக்கும் சாம்பல் நோய், அடிச்சாம்பல் நோய், தேமல் நோயும் பயிர்களை பாதிக்கிறது. வாடல் நோய் தாக்கம், நூற்புழுதாக்கம், வெள்ளை ஈ, அசுவினி போன்ற சாறு உறிஞ்சி பூச்சிகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பயிரில் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்க விதைக்கும் முன்பே நுண்ணுயிரிகளான டிரைக்கோடெர்மோ விரிடி, பர்பியூரியோசிலியம் லீலாசினம் அல்லது கார்பன்டாசிம் ஆகியவற்றை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

ஒரே வகை பயிர்களை திரும்பத் திரும்ப சாகுபடி செய்யாமல், பயிர் சுழற்சி முறையை கட்டாயம் பின்பற்ற வேண்டும். வயலைச் சுற்றிலும் மஞ்சள் நிற பூக்களைக் கொண்ட சணப்பை, செண்டு மல்லி ஆகியவற்றை பயிரிட வேண்டும். நூற்புழுக்களை கட்டுப்படுத்த செண்டுமல்லி பூச்செடியை ஊடுபயிராகவும் சாகுபடி செய்ய வேண்டும்.

பொக்கோனியா கிளாமிடோஸ் போரியா என்ற பூஞ்சாணத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 5 கிராம் என்றளவில் கலந்து தெளிக்கலாம். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியா ஆகிய உயிர் உரங்களை பயன்படுத்த வேண்டும். வயலில் நீர் தேங்காதவாறு வடித்து வெளியேற்றுவது மிகவும் அவசியம். இதனால் வேர் சம்பந்தப்பட்ட நோய்களை கட்டுப்படுத்தலாம்.



காய்கறி பயிர்களில் நோய் மற்றும் பூச்சிக்கட்டுப்பாடு மேலாண்மை குறித்த தகவல்களுக்கு, புஷ்கரம் – வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக்கோட்டை. 96888 60521 என்ற கைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பயன் பெறலாம்.



கட்டுரையாளர்கள் : **பி.ஜெய்சங்கர், உதவி பேராசிரியர், தோட்டக்கலைத் துறை, புஷ்கரம் – வேளாண் அறிவியல் கல்லூரி,**

புதுக்கோட்டை, மின்னஞ்சல் : sankarjai03 @gmail.com, மற்றும் ச.தனுஷ்யா, மின்னஞ்சல் : dhanushyasankar 2006@ gmail.com, மு. தர்ஷினி, முதலாம் ஆண்டு வேளாண் மாணவிகள், புஷ்கரம் – வேளாண் அறிவியல் கல்லூரி, புதுக் கோட்டை, மின்னஞ்சல் : 0903dharshini @gmail.com.






# வேளாண்மையில் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில் வேளாண் சுற்றுலாத்துறையின் பங்கு

நேற்றைய தொடர்ச்சி...

## இசை மற்றும் நடனம்

பாரம்பரிய இசை மற்றும் நடன வடிவங்கள் பெரும்பாலும் விவசாய வாழ்க்கை மற்றும் சமூக கொண்டாட்டங்களுடன் இணைக் கப்பட்டுள்ளன. இந்த கலை வடிவங்கள் விவசாய சுழற்சிகளின் தாளங்களையும் சடங்குகளையும் பிரதிபலிக்கின்றன. பாரம்பரிய இசை மற்றும் நடனத்தின் நேரடி நிகழ்ச்சிகளை அனுபவிக்க பார்வையாளர்களுக்கு வேளாண் சுற்றுலா வாய்ப்புகளை வழங்குகிறது. சில நிகழ்ச்சிகளில் பார்வையாளர்கள் இந்த கலாச்சார வெளிப்பாடுகளைக் கற்றுக்கொள்ளவும் பங்கேற்கவும் கூடிய ஊடாடும் பட்டறைகளும் அடங்கும்.

## பல்லுயிர் மற்றும் உள்நாட்டு பயிர்கள்

பல்லுயிர் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பேணுவதற்கு உள்நாட்டு தாவர வகைகள் மற்றும் கால்நடை இனங்களை பாதுகாப்பது மிகவும் முக்கியமானது. இந்த பாரம்பரிய பயிர்கள் மற்றும் இனங்கள் பெரும்பாலும் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்றது மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. வேளாண் சுற்றுலா பார்வையாளர்களுக்கு பல்லுயிர் பெருக்கத்தின் முக்கியத் துவம் மற்றும் அதை பாதுகாப்பதில் பாரம்பரிய விவசாய நடை முறைகளின் பங்கு பற்றி அறிவுறுத்துகிறது. பண்ணை சுற்றுப் பயணங்கள், ருசி அமர்வுகள் மற்றும் கல்வித் திட்டங்கள் மூலம் பார்வையாளர்கள் பாரம்பரிய பயிர்கள் மற்றும் இனங்களைப் பற்றி அறிந்து கொள்கிறார்கள்.

## சமூக ஈடுபாடு மற்றும் அதிகாரமளித்தல்

வேளாண் சுற்றுலாத் திட்டங்களின் வெற்றிக்கு உள்ளூர் சமூகத்தின் பங்களிப்பு அவசியம். இந்த முன்முயற்சிகள் பெரும்பாலும் பொருளாதார வாய்ப்புகளை வழங்குவதன் மூலமும் கலாச்சார பெருமையை ஊக்குவிப்பதன் மூலமும் சமூகங்களை மேம்படுத்துகின்றன. வேளாண்–சுற்றுலா சமூக உறுப்பினர்களின் செயலில் பங்கேற்பதை ஊக்குவிக்கிறது. அவர்களின் அறிவு மற்றும் மரபுகள் மதிப்பு மற்றும் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது. இந்த அதிகாரம் கலாச்சார பாரம்பரியத்தை நிலைநிறுத்த உதவுகிறது மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவுகிறது,

### சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

அதன் நன்மைகள் இருந்தபோதிலும், கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும் விவசாய–சுற்றுலாவின் திறன் சுற்றுச்சூழல் விளைவு, நம்பகத்தன்மை இழப்பு மற்றும் வணிகமயமாக்கல் உள்ளிட்ட சிக்கல்களால் சூழப்பட்டுள்ளது. ஆனால் வளர்ச்சி மற்றும் படைப் பாற்றலுக்கான வாய்ப்புகள் நிறைய உள்ளன. வேளாண்–சுற்றுலா கிராமப்புறங்களின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு பங்களிக்கும் அதே வேளையில் நிலையான நடைமுறைகள் மற்றும் சமூக ஈடுபாட்டை வலியுறுத்துவதன் மூலம் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்கும்.

விவசாயத்தில் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாப்பதில் வேளாண் சுற்றுலா முக்கிய பங்கு வகிக்கிறது. பாரம்பரிய விவசாய நடைமுறைகள், சமையல் பாரம்பரியம், கைவினைப் பொருட்கள், திருவிழாக்கள் மற்றும் பலவற்றை ஊக்குவிப்பதன் மூலம்,






கிராமப்புற சமூகங்களின் கலாச்சார அடையாளத்தை பராமரிக்க வேளாண் சுற்றுலா உதவுகிறது.

நிலையான மற்றும் அனுபவமிக்க பயணங்களில் ஆர்வம் அதிகரித்து வருவதால், வேளாண் – சுற்றுலா கலாச்சார பாரம் பரியத்தைப் பாதுகாப்பதற்கும் கிராமப்புறங்களின் நிலையான வளர்ச்சிக்கும் பங்களிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

கட்டுரையாளர் : **ச.திவ்யா, முனைவர் பட்டப்படிப்பு மாணவி (வேளாண் விரிவாக்கக் கல்வி), தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.**

**முற்றும்.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.